## சுருக்கம்

பணியமைப்பு – நகராட்சி நிர்வாகம் – திரு மா. அசோக்ராஜ், வருவாய் உதவியாளர் மற்றும் மூவரின் பணி நியமனம் – உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (இருபதாண்டு) எண்.96** **நாள்:22.10.2010.**

**படிக்கப்பட்டன:**

1. சென்னை உயர்நீதி மன்ற நீதிப் பேராணை எண்கள் 31963, 31964, 31970 மற்றும் 32031/2006–ல் தீர்ப்பு, நாள் 28.04.2009.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.32040/2009/கே2, நாள் 03.11.2009, 15.05.2010 மற்றும் 06.09.2010.

----

**ஆணை:–**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள், திரு எம். அசோக்ராஜ், வருவாய் உதவியாளர், திருத்துறைப்பூண்டி நகராட்சி, திரு கே. பிரபாகரன், வருவாய் உதவியாளர், அம்பத்தூர் நகராட்சி, திரு டி. சண்முகராஜா, வருவாய் ஆய்வர், கொடைக்கானல் நகராட்சி மற்றும் திரு எல். ரெக்ஸ், பதிவறை எழுத்தர், கொடைக்கானல் நகராட்சி ஆகியோர் கீழ்காணும் நகராட்சிகளில் தினக்கூலியாக பணிபுரிந்து அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின்படி விதிகளை தளர்த்தி முறையான பணியிடத்தில் பணியமர்த்தப்பட்டனர் என தெரிவித்துள்ளார்.

| வ. எண். | பெயர் | அரசாணை எண். | பணியமர்த்தப்பட்ட நகராட்சி மற்றும் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1. | அசோக்ராஜ் | (3டி)எண்.79, ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 29.06.95 | 16.08.95 முதல் அரக்கோணம் நகராட்சியில் வருவாய் உதவியாளர். |
| 2. | கே. பிரபாகரன் | (3டி)எண்.78, ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 29.06.95 | 03.07.95 முதல் அரக்கோணம் நகராட்சியில் வருவாய் உதவியாளர். |
| 3. | டி. சண்முகராஜா | (4டி)எண்.12, ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 16.06.95 | 28.06.95 முதல் கொடைக்கானல் நகராட்சியில் தட்டச்சர். |
| 4. | எல். ரெக்ஸ் | (3டி) எண்.93, ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 13.07.95 | 26.07.95 முதல் கொடைக்கானல் நகராட்சியில் பதிவறை எழுத்தர். |

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலும், விதிகளை தளர்த்தி பணிநியமன முறைகளுக்கு முரணாக தினக்கூலிப் பணியாளர்களை நிரந்தர பணியிடத்தில் அமர்த்தி பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளை ரத்து செய்து அரசாணை எண்.266, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 15.10.1996–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், இதனை எதிர்த்து சம்பந்தப்பட்ட பணியாளர்கள் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்ததில் உரிய விளக்கம் கோராமல் பணிநியமன உத்தரவுகளை ரத்து செய்தது செல்லாதது என தீர்ப்பளிக்கப்பட்டது என்றும், அதன் பின்னர், சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு, விதிகளுக்கு முரணாக பணியமர்த்தி பிறப்பித்த உத்தரவுகளின்

அடிப்படையில் வழங்கப்பட்ட பணிநியமனத்தை ஏன் ரத்து செய்யக்கூடாது என விளக்கம் (Show Cause Notice) கோரப்பட்டது என்றும், இதனை எதிர்த்து சம்பந்தப்பட்ட பணியாளர்கள் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் தடையுத்தரவு பெற்று தொடர்ந்து பணியில் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும் அவர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் தொடர்ந்த வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்துக்கு நீதிப்பேராணை எண்கள் 31963/06 (எம். அசோக்ராஜ்), 31964/06 (கே. பிரபாகரன்), 31970/06 (சண்முகராஜா) மற்றும் 32031/06 (L. ரெக்ஸ்) ஆக மாற்றப்பட்டு 28.04.2009–ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் தனியர்களை அவர்களது பணிநியமனம் சம்பந்தப்பட்ட விவரங்களுடன் மனுவினை அரசுக்கு சமர்ப்பிக்குமாறும், அவ்வாறு தனியர்கள் மனுவினை சமர்ப்பித்த மூன்று மாதங்களுக்குள், அரசாணை எண்.128, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29.03.2005–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையினை கருத்தில் கொண்டு, உரிய உத்தரவினை பிறப்பிக்குமாறு அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருவதாலும், சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை எண்.128, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29.03.2005–ல் இப்பணியாளர்கள் போன்ற தனியர் இருவரின் பணி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதாலும் மேற்காணும் பணியாளர்களை அவர்கள் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து பணிவரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்கலாம் என தெரிவித்து, நகராட்சி ஆணையரிடமிருந்து பெறப்பட்ட பிரேரணைகள், மேற்படி பணியாளர்கள் அளித்துள்ள முகாந்திரங்களுடன் உரிய ஆணைகள் பிறப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பு மற்றும் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் திருவாளர்கள் மா. அசோக்ராஜ், வருவாய் உதவியாளர் (24.04.2010–ல் பணியிடைக் காலாமானவர்), கே. பிரபாகரன், வருவாய் உதவியாளர், டி. சண்முகராஜா, தட்டச்சர் மற்றும் திரு L. ரெக்ஸ், பதிவேடு எழுத்தர் ஆகியோரின் பணியினை முறையே அவர்கள் பணியில் சேர்ந்த நாட்களான 16.08.95, 03.07.1995, 28.06.1995 மற்றும் 26.07.1995–ல் வரன்முறைப் படுத்தலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை – 108.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை.
நகராட்சி ஆணையர், திருத்துறைப்பூண்டி / அம்பத்தூர் / கொடைக்கானல்.
நகல்:– மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்